14th March 1958]

SRI K. PONNIYYAN : தலைவர் அவர்களே, தற்போது கொய்னாவினால் சர்க்காருக்கு அதிகமான நஷ்டம் எற்படுவதாகக் கேள்விப்படுகிறேன். உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுடைய வசதிகள், சம்பளங்கள் முதலியன அதிகப் பட்டிருப்பதனால் நஷ்டம் சிறிது ஏற்பட்டுவருகிறது. இருந்தாலும் இனி என்ன செய்வது என்பது முற்றிலும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI M. JAGANNATHAN : The synthetic manufacture of anti-malarial drugs started by the Government of India is offering serious competition to the quinine consumption by this State. What steps have been taken by this State to stop the synthetic production of anti-malarial drugs by the Government of India?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no idea of completely banning the production or distribution of synthetic manufacture in Madras. But when I said that there was a demand for one lakh tons of quinine products in this State, I excluded about 40,000 tons of synthetic products that were available.

SRI K. RAMASUBBU : பெங்கால் கொய்னாவுக்கும் நமது கொய்னாவுக்கும் தரத்தில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தரத்தில் வித்தியாசம் இருப்பதாகச் சொல்லமுடியாது. நஷ்டப்பட்டாலும் விற்கவேண்டும் என பக்கத்து ராஜ்யத்தில் அனுப்புகிறார்கள்.

Harijan Welfare

* 327 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received the film entitled "Harijan Welfare" from the Film Division of Government of India; and

(*b*) if so, the steps taken to screen it in all the cinema theatres in the State?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. JAGANNATHAN : இந்த "ஹரிஜனநலன்" என்ற சினிமா படம், மத்திய சர்க்காரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதை நமது சர்க்கார் வாங்கி தமிழ் நாட்டில் இருக்கிற சினிமா கொட்டகைகளில் அந்தப் படத்தைக் காட்டினால் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்கு அது மிகவும் அனுகூலமாக இருக்குமாதலால் அதைச் செய்ய சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அந்த ஆலோசனை பரிசீலனை செய்யப்படும்.

Untouchability

* 328 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have taken any full length feature film depicting the fight against the practice of untouchability; and

(*b*) if so, when it will be released to the public?